கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.06.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு பயிர் பண்பு முன்கணிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வியில் முன்னோடியாக இருக்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU), செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த வேளாண்மைப் பகுப்பாய்வில் நிபுணத்துவம் பெற்ற வளர்ந்து வரும் நிறுவனமான வலேரியா விஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் (MoA) மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவான தோற்றவமைப்பு, மரபணு மற்றும் சுற்றுச்சூழல் தரவுத்தொகுப்புகளைப் பயன்படுத்தி மக்காச்சோளத்தில் பண்பு முன்கணிப்புக்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இயங்குதளங்கள் உருவாக்கப்படும். இது தரவு அறிவியல் மற்றும் பயிர் அறிவியலில் முக்கியமான முன்னெடுப்பாக இருக்கும். வேளாண்மையில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதிநவீன AI தொழில்நுட்பங்கள் மூலம் பயிர் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், மேலும், கல்வி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்முனைவை ஊக்குவிப்பதின் மூலம், வளரும் தொழில்நுட்ப உலகில் வேளாண் முன்னேற்றத்திற்கும், நிலையான உணவு உற்பத்திக்கு பங்களிப்பை வழங்கவும் இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன் அவர்கள் மற்றும் வலேரியா விஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணை நிறுவனர் மற்றும் இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி மற்றும் தொழில்நுட்பத் தலைவர் ஸ்ரீ விஷ்ணுவர்தன் ஆகியோருக்கு இடையே முறையாக ஒப்பந்தம் 20.06.2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில் அவர்கள் பங்கேற்றார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**